செ.வெ.எண்: 12 நாள்: 06.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.92.17 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் திருமயம் ஊராட்சி ஒன்றியம், கோட்டூர் ஊராட்சி, கோட்டூரில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கிராம சேவை மைய கட்டிட பணியையும், ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் புதுக்கண்மாய் தூர்வாறும் பணியையும், பேரையூர் விளக்கு முதல் கோட்டையூர் விளக்கு வரை மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் பணியையும், கோட்டூர் சாலையில் ரூ.18.87 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம் கோட்டூர் ஊராட்சி கோட்டூரில் கட்டப்பட்டு வரும் கிராம சேவை மைய கட்டிட பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் விராச்சிலை ஊராட்சி, விராச்சிலையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட நிதியின் கீழ் ரூ.5.98 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி கட்டிடப்பணியையும், ஆதனூர் ஊராட்சி, ஆதனூரில் பிரதமமந்திரி அவாஷ்யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வீட்டின் பணியையும், அரண்மனைப்பட்டியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.25.62 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பட்டுள்ள நாற்றங்கால் பணியையும் என மொத்தம் ரூ.92.17 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது குளங்களிலுள்ள தேவையற்ற செடி, கொடிகள் மற்றும் கருவேலமரங்களை அகற்றி சரியான அளவுகளில் ஆழப்படுத்தவும், வீட்டின் கட்டுமானப்பணிகளை தரைத்தளம், கைப்பிடிச்சுவர், மேற்பூச்சு உள்ளிட்ட அனைத்துப்பணிகளை விரைவாக மேற்கொள்ளவும், நடப்பட்டுள்ள மரப்போத்துகளை தினமும் நீர் ஊற்றி பராமரிக்கவும், நாற்றங்கால் பணிகளில் நாவல் மரக்கன்றுகளை அதிக அளவில் நட்டு வளர்க்கவும், முடிவுற்ற பணிகளை உரிய முறையில் பராமரிக்கவும், மேலும் நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டிமுடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோட்டூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் மாணவ, மாணவிகள் கல்வித்தரத்தை ஆய்வு செய்ததுடன் சத்துணவுக்கூடத்தில் சமைக்கப்பட்டுள்ள உணவினை சாப்பிட்டு உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சரோஜா, திரு.வேலு, வட்டாட்சியர் திரு.சார்லஸ், உதவிப்பொறியாளர்கள் திரு.ஆனந்தராஜா, திரு.சேது, ஒன்றியப்பணி மேற்பார்வையாளர்கள் திரு.குண்டுமணி, திரு.சிவசங்கரன், திரு.அறிவழகன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**